கணினி தொழில்நுட்பம், மென்பொருள் துறையில் ஆராய்ச்சி, புத்தாக்க பணிகளை மேற்கொள்ள

அமெரிக்க கே.எல்.ஏ. இந்தியா ரூ.3,510 கோடி முதலீடு: ஸ்டாலின் முன்னிலையில் ஒப்பந்தம்

சென்னை, பிப்.14–

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் முன்னிலையில் தலைமைச் செயலகத்தில், அமெரிக்காவைச் சேர்ந்த கே.எல்.ஏ. கார்ப்பரேஷன் நிறுவனத்தின் துணை நிறுவனமான கே.எல்.ஏ. இந்தியா லிமிடெட் 3,510 கோடி ரூபாய் முதலீட்டு பொறுப்புறுதியுடன், சென்னையில் ஆராய்ச்சி மற்றும் மேம்பாடு மற்றும் புத்தாக்க மையம் அமைப்பதற்கு புரிந்துணர்வு ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட்டது.



அமெரிக்க நாட்டைத் தலைமையிடமாகக் கொண்ட கே.எல்.ஏ. கார்ப்பரேஷன், செமிகண்டக்டர் துறைக்கான தொழில்நுட்பத் தீர்வுகளை வழங்கும் உலகளாவிய முன்னணி நிறுவனம் ஆகும். இந்நிறுவனம், சிப் உற்பத்தியில் பயன்படும் ஆய்வு, அளவீடு மற்றும் தரவு பகுப்பாய்வு அமைப்புகளை உருவாக்குகிறது. இதன் தொழில்நுட்பங்கள், செமிகண்டக்டர் தயாரிப்புகளின் தரம், செயல்திறன் மற்றும் உற்பத்தி திறனை மேம்படுத்த உதவுகின்றன. உலகம் முழுவதும் உள்ள முன்னணி சிப் உற்பத்தியாளர்களுக்கு ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு சேவைகளை வழங்கி, புதிய தலைமுறை செமிகண்டக்டர் வளர்ச்சியில் இந்நிறுவனம் முக்கிய பங்கு வகிக்கிறது.

கே.எல்.ஏ. கார்ப்பரேஷனின் துணை நிறுவனமான கே.எல்.ஏ. இந்தியா நிறுவனம், 3,600 கோடி ரூபாய் முதலீட்டு பொறுப்புறுதியுடன் சென்னையில், ஆராய்ச்சி மற்றும் மேம்பாடு மற்றும் புத்தாக்க வளாகத்தை அமைக்க முதலமைச்சர் முன்னிலையில் இன்றையதினம் புரிந்துணர்வு ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட்டது. 12 ஏக்கர் நிலப்பரப்பளவிலான இந்த வளாகத்தில், உயர் செயல்திறன், கணினி தொழில்நுட்பம், செயல்முறை கட்டுப்பாடு, பொறியியல் மென்பொருள் போன்ற துறைகளில், மேம்பட்ட ஆராய்ச்சி மற்றும் புத்தாக்க பணிகளை இந்நிறுவனம் மேற்கொள்ள உள்ளது. இதன்மூலம், அடுத்த 10 ஆண்டுகளில், சுமார் 4,000 உயர்தர வேலைவாய்ப்புகள் உருவாகும் என எதிர்பார்க்கப்படுகிறது.

இந்நிகழ்ச்சியில், துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின், தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு துறை அமைச்சர் டி.ஆர்.பி. ராஜா, தலைமைச் செயலாளர் நா.முருகானந்தம், வர்த்தகத்துறை செயலாளர் வி. அருண்ராய், வழிகாட்டி நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநர் மற்றும் தலைமைச் செயல் அலுவலர் தாரேஸ் அகமது, கே.எல்.ஏ. நிறுவனத்தின் தலைமை திட்ட அலுவலர் பாபி பெல், மூத்த இயக்குநர் சேக்ஹௌ இயோ, அரசு விவகாரங்கள் தலைவர் நூரி ஷஃபேய், கே.எல்.ஏ. இந்தியா தலைவர் டொமினிக் டேவிட் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

19 ஆயிரம் கோயில்களுக்கு ரூ.8.58 கோடியில் பூஜை உபகரணங்கள்

ஒருகால பூஜை கோவில்களுக்கு அரசு நிதி ரூ.25 கோடி; அர்ச்சகர்களுக்கு மாதாந்திர ஊக்கத்தொகை ரூ.1,500

முதலமைச்சர் ஸ்டாலின் வழங்கினார்

சென்னை, பிப்.14–

ஒருகால பூசைத் திட்டத்தில் 1,000 திருக்கோயில்களை இணைத்திட அரசு நிதி ரூ.25 கோடிக்கான காசோலை, அதன் அர்ச்சகர்களுக்கு உயர்த்தப்பட்ட மாதாந்திர ஊக்கத்தொகை ரூ.1,500க்கான காசோலைகள், 19,000 ஒருகால பூசைத் திட்டத் திருக்கோயில்களுக்கு பூசை உபகரணங்களை முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் வழங்கினார்.

2025 – 2026 ஆம் நிதியாண்டிற்கான சட்டமன்ற அறிவிப்பில் "ஒருகால பூசைத் திட்டத்தின் கீழ் ஏற்கனவே 18,000 திருக்கோயில்கள் பயனடைந்து வருகின்றன. இவ்வாண்டு 1,000 நிதி வசதியற்ற திருக்கோயில்களுக்கு இத்திட்டம் விரிவுபடுத்தப்படும். இதற்கான மொத்த செலவினம் 25 கோடி ரூபாய் அரசு நிதியாக வழங்கப்படும்" என்று அறிவிக்கப்பட்டது.

இந்த அறிவிப்பினை செயல்படுத்திடும் வகையில் 25 கோடி ரூபாய்க்கான காசோலையினை முதலமைச்சர் தமிழ்நாடு மின்விசை நிதி மற்றும் அடிப்படை வசதி மேம்பாட்டு நிறுவனத்தில் வைப்பு நிதியாக முதலீடு செய்யும் விதமாக அதன் மேலாண்மை இயக்குநரிடம் வழங்கினார். இதனை தொடர்ந்து ஒருகால பூசைத் திட்டத்தில் பயன்பெறும் திருக்கோயில்களின் எண்ணிக்கை 19,000 ஆக உயர்ந்துள்ளது.

அர்ச்சகர்களுக்கு ஊக்கத்தொகை உயர்வு

2025–2026ம் நிதியாண்டிற்கான சட்டமன்ற அறிவிப்பில், "ஒரு கால பூசைத் திட்ட திருக்கோயில்களில் பூசை செய்யும் அர்ச்சர்களின் வாழ்வாதாரத்தை உயர்த்தும் நோக்கில் ஏற்கனவே வழங்கப்பட்டு வரும் மாத ஊக்கத்தொகை ரூ.1,000 லிருந்து ரூ.1,500 ஆக உயர்த்தி வழங்கப்படும்" என்று அறிவிக்கப்பட்டது. இந்த அறிவிப்பினை நிறைவேற்றிடும் வகையில் முதலமைச்சர் 19,000 ஒருகால பூசைத் திட்ட அர்ச்சகர்களுக்கு உயர்த்தப்பட்ட மாதாந்திர ஊக்கத்தொகை ரூ.1,500 வழங்கிடும் அடையாளமாக 10 அர்ச்சகர்களுக்கு அதற்கான காசோலைகளை வழங்கினார்.

கோயில்களுக்கு பூசை உபகரணங்கள்

2025–2026 ஆம் நிதியாண்டிற்கான இந்து சமய அறநிலையத்துறை சட்டமன்ற அறிவிப்பில், "ஒருகால பூசைத் திட்டத்தின் கீழ் ஏற்கனவே உள்ள 18,000 திருக்கோயில்களுடன் இவ்வாண்டு விரிவுபடுத்தப்படும் 1,000 திருக்கோயில்களை சேர்த்து மொத்தம் 19,000 திருக்கோயில்களுக்கு பூசைகள் செய்திட உதவியாக பித்தளை தாம்பாளம், தூபக்கால், மணி, விளக்கு உள்ளிட்ட பூசை உபகரணங்கள் வழங்கப்படும்" என அறிவிக்கப்பட்டது.

இந்த அறிவிப்பினை செயல்படுத்திடும் வகையில், முதலமைச்சர் 8.58 கோடி ரூபாய் செலவில் கொள்முதல் செய்யப்பட்ட பூசை உபகரணங்களை 19,000 ஒருகால பூசைத் திட்டத் திருக்கோயில்களுக்கு வழங்கிடும் அடையாளமாக 50 ஒருகால பூசைத் திட்ட திருக்கோயில்களின் அர்ச்சகர்களிடம் பூசை உபகரணங்களை வழங்கினார். ஒவ்வொரு திருக்கோயிலுக்கும் ரூ.4,515 செலவில் பித்தளையிலான தாம்பாளம், தட்டு (3 கிண்ணங்களுடன்), சொம்பு, தூபக்கால், மணி, காமாட்சி விளக்கு மற்றும் பஞ்சபாத்திரம் ஆகிய பூசை உபகரணங்கள் வழங்கப்பட்டுள்ளன.

இந்த அரசு பொறுப்பேற்றபின், ஒருகால பூசைத் திட்டத் திருக்கோயில்களின் மின் கட்டணத்தை துறையே செலுத்திடும் வகையில் 6 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு திருக்கோயில்களின் மின் கட்டணம் செலுத்தப்பட்டு வருகிறது. மேலும், ஒருகால பூசைத் திட்டத் திருக்கோயில்களின் அர்ச்சகர்களின் குழந்தைகள் உயர்கல்வி பயில கல்வி உதவித்தொகையாக 10 ஆயிரம் ரூபாய் வீதம் 1,500 மாணவ, மாணவியருக்கு வழங்கப்பட்டுள்ளது. ஒட்டுமொத்தமாக ஒருகால பூசைத் திட்டத்திற்கு மட்டும் 335 கோடி ரூபாய் அரசு நிதியாக வழங்கப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்க அம்சமாகும்.

இந்நிகழ்ச்சியில், துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின், இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு, தலைமைச் செயலாளர் நா.முருகானந்தம், சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் டாக்டர் க.மணிவாசன், இந்து சமய அறநிலையத்துறை ஆணையர் பி.என்.ஸ்ரீதர், கூடுதல் ஆணையர்கள் துரை. இரவிச்சந்திரன் கோ.செ. மங்கையர்க்கரசி மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

தவெகவில் விருப்ப மனு சமர்ப்பிக்க கால அவகாசம் 20–ந் தேதி வரை நீட்டிப்பு

சென்னை, பிப். 14–

சட்டமன்ற தேர்தலில் தவெக சார்பில் போட்டியிட விரும்புபவர்கள் கடந்த 6ந்தேதி முதல் 14ந்தேதி (இன்று) வரை விருப்ப மனுக்களை பெற்று, பூர்த்தி செய்து வழங்கலாம் என்று தெரிவிக்கப்பட்டிருந்தது. இந்த நிலையில் தவெகவில் விருப்ப மனுவைச் சமர்ப்பிக்கக் கால அவகாசம் நீட்டிக்கப்பட்டுள்ளது.

இதுதொடர்பாக தவெக பொதுச்செயலாளர் என்.ஆனந்த் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவித்திருப்பதாவது:

வரும் சட்டமன்றத் தேர்தலில் தமிழக வெற்றிக் கழகம் சார்பில் 234 சட்டமன்றத் தொகுதிகளிலும் வேட்பாளராகப் போட்டியிட விரும்பும் கழகத் தோழர்கள் தங்களுக்கான விருப்ப மனுவைப் பெறுவதற்கும் அதனைச் சமர்ப்பிப்பதற்குமான கடைசித் தேதி இன்று (14.02.2026) என ஏற்கெனவே அறிவிக்கப்பட்டிருந்தது.

இந்நிலையில், கழகத்தின் பல்வேறு நிகழ்ச்சிகள் காரணமாக, வழங்கப்பட்ட கால அவகாசத்திற்குள் பெரும்பாலான கழகத் தோழர்களால் விருப்ப மனுவைச் சமர்ப்பிக்க முடியாமல் போனதாகத் தெரிவித்து வருகின்றனர். எனவே தோழர்களின் வேண்டுகோளுக்கு இணங்க, விருப்ப மனுவைப் பூர்த்தி செய்து அளிப்பதற்கான கால அவகாசம் நீட்டிக்கப்படுகிறது. அதன்படி, வரும் 20–ந் தேதி (20.02.2026) வரை கழகத் தோழர்கள் தங்களது விருப்ப மனுவைத் தலைமை நிலையச் செயலகத்தில் சமர்ப்பிக்கலாம். விருப்ப மனுக்களைச் சமர்ப்பிக்க அதுவே கடைசி நாள் ஆகும். கழகத் தலைவரின் ஒப்புதலின் பேரில் இந்த அறிவிப்பு வெளியிடப்படுகிறது.

இவ்வாறு அந்த அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

OLYMPIC CARDS LIMITED

Symbol of sentiment & satisfaction Since 1962 OLYMPIC TRADE MARK

Registered Office : No. 195, N.S.C. Bose Road, Chennai - 600 001.
Tel : 044-42921000; Fax No : 044-25390300; Website : www.oclwed.com; Email : office@oclwed.com
CIN No. L65993TN1992PLC022521; GST NO : 33AAACO3651L1ZH

EXTRACT OF UNAUDITED FINANCIAL RESULTS (STANDALONE) FOR THE QUARTER AND NINE MONTHS ENDED DECEMBER 31, 2025 (Rs. in Lakhs Except EPS)

Sl NO.	Particulars	Quarter Ended			Nine Months Ended		Year Ended
		31/12/2025 (Unaudited)	30/09/2025 (Unaudited)	31/12/2024 (Unaudited)	31/12/2025 (Unaudited)	31/12/2024 (Unaudited)	31/03/2025 (Audited)
1	Total Income from Operations (net)	559.83	305.47	231.27	1082.20	664.06	963.27
2	Net Profit / (Loss) for the period (Before Tax and Exceptional Items)	108.87	(102.62)	(116.40)	(98.93)	(353.32)	(449.42)
3	Net Profit / (Loss) for the period before Tax (After Exceptional items)	108.87	(102.62)	(116.40)	(98.93)	(353.32)	(449.42)
4	Net Profit/ (Loss) for the period after tax (after Exceptional items)	330.89	(99.65)	(114.30)	129.05	(345.68)	(439.06)
5	Reserves (excluding revaluation reserve as shown in the Audited Balance Sheet of previous year)	-	-	-	-	-	(1499.37)
6	Equity Share Capital (Face Value Rs.10/-)	1,630.87	1,630.87	1,630.87	1,630.87	1,630.87	1,630.87
7	Earning Per Share (not Annualised) (Face value of Rs.10/- per Share) -Basic Rs. -Diluted Rs.	2.03 2.03	(0.61) (0.61)	(0.70) (0.70)	0.79 0.79	(2.12) (2.12)	(2.69) (2.69)

Note: 1. The above is an extract of the detailed format of Financial Results for the quarter/nine months ended 31st December 2025 filed with the Stock Exchange under Regulation 33 of the SEBI (Listing and other Disclosure Requirements) Regulations, 2015. The full Format of the Quarterly/nine months ended Financial Results are available on the websites of the Bombay Stock Exchange www.bseindia.com and Company's Website : www.oclwed.com.

Scan me!

For and on behalf of the Board of Directors of
OLYMPIC CARDS LIMITED
Sd/-
N. MOHAMED FAIZAL - MANAGING DIRECTOR
DIN : 00269448

Place : Chennai
Date : February 12, 2026

TULSYAN NEC LIMITED

Regd. Off. : 1st Floor, Apex Plaza, 3, Nungambakkam High Road, Chennai - 600 034. **Phone :** 044 - 6199 1060.
Fax : 044 - 6199 1066. **email :** investor@tulsyannec.in
Website : www.tulsyannec.in **CIN No. :** L28920TN1947PLC007437

Extract of Standalone and Consolidated Un-Audited Financial Results for the Quarter and Nine Months ended December 31, 2025 under Ind AS

(₹ in Lakhs)

Sl. No.	Particulars	Standalone			Consolidated		
		Quarter ended December 31, 2025 (Unaudited)	Year to date figures December 31, 2025 (Unaudited)	Previous quarter ended December 31, 2024 (Unaudited)	Quarter ended December 31, 2025 (Unaudited)	Year to date figures December 31, 2025 (Unaudited)	Previous quarter ended December 31, 2024 (Unaudited)
1.	Total Income from Operations	14,136.04	60,455.78	16,060.63	16,165.63	66,365.48	18,053.33
2.	Net Profit/(Loss) for the period (before tax and exceptional items)	(2,802.18)	(4,495.38)	(2,688.84)	(2,862.67)	(4,497.10)	(2,695.78)
3.	Net Profit/(Loss) for the period before tax (after exceptional items)	(2,802.18)	(4,495.38)	(2,688.84)	(2,862.67)	(4,497.10)	(2,695.78)
4.	Net Profit/(Loss) for the period after tax (after exceptional items)	(2,802.18)	(4,495.38)	(2,688.84)	(2,862.67)	(4,497.10)	(2,695.78)
5.	Other comprehensive Income (net of tax)	-	-	-	-	-	-
6.	Total comprehensive Income for the period [comprising Profit/(Loss) for the period (after tax) and Other comprehensive Income (after tax)]	(2,802.18)	(4,495.38)	(2,688.84)	(2,862.67)	(4,497.10)	(2,695.78)
7.	Equity Share Capital (face Value of Rs.10 per share)	1,646.14	1,646.14	1,655.14	1,646.14	1,646.14	1,655.14
8.	Reserves (excluding Revaluation Reserve) as shown in the Audited Balance Sheet of the previous year		25,681.62			23,333.19	
9.	Earnings Per Share (of Rs.10/- each) (for continuing and discontinued operations) (a) Basic (b) Diluted	(17.02) (17.02)	(27.31) (27.31)	(16.25) (16.25)	(17.39) (17.39)	(27.32) (27.32)	(16.29) (16.29)

NOTES :
1. The above results were reviewed and recommended by the Audit Committee of the Board, and has been approved by the Board of Directors at its meeting held on 13th February 2026.
2. The statement has been prepared in accordance with the Companies (Indian Accounting Standards) Rules, 2015 (Ind AS) prescribed under section 133 of the Companies Act, 2013 and other recognised accounting practices and policies to the extent applicable.
3. The above is an extract of the detailed format of the unaudited standalone and consolidated financial results for the Quarter and Nine months ended December 31, 2025 filed with the Stock Exchange under Regulation 33 of the SEBI (Listing Obligations and Disclosure Requirements) Regulations, 2015. The full format of the Unaudited Financial Results for the Quarter and Nine months ended December 31, 2025 are available on the website of the BSE Limited i.e. **www.bseindia.com**, on the Stock Exchange where the Company's shares are listed and on the website of the Company i.e., **www.tulsyannec.in.** The same can be accessed by scanning the Quick Response Code (QR Code) provided below.
4. The previous year figures have been regrouped/re-classified wherever necessary.

for Tulsyan NEC Limited
Sd/-
Sanjay Tulsyan
Managing Director
DIN : 00632802

Place : Chennai
Date : 13th February, 2026

மாதவரம் பகுதியில் செல்போன் பறிப்பு: 3 பேர் கைது

சென்னை, பிப். 14–

சென்னை, மணலி, மாத்தூர் பகுதியில் வசித்து வரும் சீமான் என்பவர் வாடகை கார் ஓட்டுநராக வேலை செய்து வருவதாகவும், கடந்த மாதம் 27 அதிகாலை வேலை முடித்து மாதவரம் ரவுண்டானா பேருந்து நிறுத்தத்தில் பேருந்துக்காக காத்திருந்த போது அங்கு இருசக்கர வாகனத்தில் வந்த 3 நபர்கள் சீமான் கையில் வைத்திருந்த செல்போனை பறித்துக் கொண்டு தப்பிச்சென்றதாகவும், துரத்திச் சென்றும் அவர்களை பிடிக்க முடியாததால், செல்போனை பறித்துச் சென்ற நபர்களை கண்டுபிடித்து தனது செல்போனை மீட்டு தரும்படியும், மாதவரம் காவல் நிலைய குற்றப்பிரிவில் புகார் கொடுத்தார்

அதன் பேரில் மாதவரம் காவல் நிலைய குற்றப்பிரிவு காவல் ஆய்வாளர் தலைமையிலான காவல் குழுவினர் சம்பவ இடத்தில் தீவிர விசாரணை செய்து, செல்போன் பறிப்பில் ஈடுபட்ட சென்னை, பழைய வண்ணாரப்பேட்டை, கீரைத்தோட்டம் பகுதியைச் சேர்ந்த தமிழ்ச்செல்வன், வினோத் மற்றும் முகமது ஷெரிப் ஆகிய 3 நபர்களை கைது செய்தனர். விசாரணையில் செவ்வாப்பேட்டை பகுதியில் இருசக்கர வாகனத்தை திருடிக் கொண்டு, அந்த வாகனம் மூலம் மாதவரம், எம்.கே.பி நகர், புழல் மற்றும் வியாசர்பாடி பகுதிகளில் செல்போன் பறிப்பில் ஈடுபட்டுள்ளதும் தெரியவந்தது.

அதன்பேரில், புகார்தாரரின் செல்போன் உட்பட 5 செல்போன்கள் மற்றும் 1 இருசக்கர வாகனம் மீட்கப்பட்டது. விசாரணையில் ஏற்கனவே தமிழ்ச்செல்வன் மீது 5 குற்ற வழக்குகளும், வினோத் மீது 2 குற்ற வழக்குகளும், முகமது ஷெரிப் மீது 9 குற்ற வழக்குகளும் உள்ளது தெரியவந்தது. கைது செய்யப்பட்ட மூவரும் விசாரணைக்குப் பின்னர் நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்பட்டு நீதிமன்ற உத்தரவுப்படி சிறையில் அடைக்கப்பட்டனர்.

கிருஷ்ணகிரியில் ரூ. 3 கோடி இரிடியம் மோசடி: 6 பேர் கைது

கிருஷ்ணகிரி, பிப். 14–

ரிசர்வ் வங்கி மூலம் வெளிநாடுகளில் இரிடியம் விற்று பணம் பெற்று தருவதாக கூறி பல்வேறு மாநிலங்களில் ஏராளமானவர்களிடம் பல கோடி ரூபாய் வரை மோசடி செய்யப்பட்டது. இந்த மோசடியில் ஏற்கனவே பல்வேறு இடங்களில் 12 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இதற்கிடையே கிருஷ்ணகிரி மாவட்டத்தில் ரூ.3 கோடி வரை மோசடி செய்யப்பட்டது குறித்து சி.பி.சி.ஐ.டி. விசாரணை நடத்தி வருகின்றனர். இந்த மோசடி தொடர்பாக பீகாரை சேர்ந்த சோனுகுமார்துபே (வயது 29), தெலுங்கானாவை சேர்ந்த ஜார்ஜ் தாம்ஸ் (35) உள்பட 6 பேரை தனிப்படையினர் கைது செய்தனர். விசாரணையில் அவர்கள் நாடு முழுவதும் 23 பேரிடம் ரூ.5 கோடியே 65 லட்சம் வரை மோசடி செய்தது தெரியவந்தது. இது தொடர்பாக சி.பி.சி.ஐ.டி. போலீசார் தீவிர விசாரணை நடத்தி வருகின்றனர்.

சுவிட்ச்சிங் டெக்னாலஜிஸ் குந்தர் லிமிடெட்

பதிவு அலுவலகம் : பி9 & பி10, சிறப்பு பொருளாதார மண்டலம், MEPZ, கடப்பேரி, தாம்பரம், சென்னை 600 045
CIN: L29142TN1988PLC015647 Email_id: stgindia@stg-india.com Website:www.switchingtechnologiesguntherltd.com

31 டிசம்பர், 2025ல் முடிந்த காலாண்டு மற்றும் ஒன்பது மாதங்களுக்கான தணிக்கை செய்யப்படாத தனியான நிதிநிலை முடிவுகள் அறிக்கை

(ரூ. லட்சத்தில்)

விவரங்கள்	முடிந்த காலாண்டு			முடிந்த ஒன்பது மாதங்கள்		முடிந்த ஆண்டு
	31.12.2025 (தணிக்கை யாகாதது)	30.09.2025 (தணிக்கை யாகாதது)	31.12.2024 (தணிக்கை யாகாதது)	31.12.2025 (தணிக்கை யாகாதது)	31.12.2024 (தணிக்கை யாகாதது)	31.03.2025 (தணிக்கை யானது)
வருமானம்						
செயல்பாடுகள் மூலம் வருமானம்	192.77	221.80	200.65	616.05	584.70	771.93
இதர வருமானம்	-	-	-5.78	-	0.66	1.29
மொத்த வருமானம்	**192.77**	**221.80**	**194.87**	**616.05**	**585.36**	**773.23**
செலவுகள்:						
(a) பயன்படுத்தப்பட்ட பொருட்களுக்கான செலவு	168.13	166.16	138.45	465.31	441.44	564.86
(b) வர்த்தகத்தில் பங்குகளை வாங்குதல்	-	-	-	-	-	-
(c) முழுமை பெற்ற பொருட்களின் சரக்கில் மாற்றம், தற்போது நடைபெற்று வரும் வேலைகள் மற்றும் வர்த்தக இருப்பு	3.04	-19.99	14.32	-13.04	10.25	-6.67
(d) ஊழியர் நல செலவுகள்	148.77	146.23	150.30	443.12	439.69	593.11
(e) தேய்மானம் மற்றும் கடன் தீர்த்தல் செலவுகள்	1.85	1.83	2.15	5.47	6.33	7.36
(f) இதர செலவுகள்	82.05	102.26	67.60	268.63	219.94	283.53
மொத்த செலவுகள்	**403.83**	**396.48**	**372.81**	**1,169.49**	**1,117.65**	**1,442.19**
வரிக்கு முன் லாபம்	**-211.05**	**-174.68**	**-177.94**	**-553.45**	**-532.29**	**-668.97**
வரி செலவுகள்						
ஒத்தி வைக்கப்பட்ட வரி	-	-	-	-	-	-
தொடர் செயல்பாடுகளில் காலத்திற்கான லாபம்/(நஷ்டம்)	-211.05	-174.68	-177.94	-553.45	-532.29	-668.97
காலத்திற்கான நிகர லாபம்/(நஷ்டம்)	-211.05	-174.68	-177.94	-553.45	-532.29	-668.97
இதர விரிவான வருமானம்						
(அ) லாபம் அல்லது நஷ்டம் என்று மறுவகைப்படுத்தப்படாத பொருட்கள்	0.000	0.000	0.000	0.000	0.000	0.000
கழிக்க : மறுவகைப்படுத்தப்படாத பொருட்கள் தொடர்பான வருமான வரி லாபம் அல்லது நஷ்டம்	0.000	0.000	0.000	0.000	0.000	-44.73
மொத்தம் இதர விரிவான வருமானம்	0.000	0.000	0.000	0.000	0.000	-44.73
காலத்திற்கான மொத்த விரிவான வருமானம் லாபம்/(நஷ்டம்) மற்றும் காலத்திற்கான இதர விரிவான வருமானத்தை உள்ளடக்கி உள்ளது	-211.05	-174.68	-177.94	-553.45	-532.29	-713.70
சம பங்கு மூலதனம் (முக மதிப்பு ஒவ்வொன்றும் ரூ.10/-)	**245.00**	**245.00**	**245.00**	**245.00**	**245.00**	**245.00**
கடந்த ஆண்டு தணிக்கை செய்யப்பட்ட இருப்பு நிலைக் குறிப்பில் உள்ளபடி ரிசர்வ்கள் (மறுமதிப்பீட்டு ரிசர்வுகள் நீங்கலாக)	**-1,526.19**	**-1,526.19**	**-812.49**	**-1,526.19**	**-812.49**	**-1,526.19**
ஒரு பங்கு சம்பாத்தியம் (தொடர் செயல்பாடுகள்)						
1) அடிப்படை	-8.61	-7.13	-7.26	-22.59	-21.73	-27.30
2) பலமிழந்தது	-8.61	-7.13	-7.26	-22.59	-21.73	-27.30

★ டிசம்பர் 31, 2025 அன்று முடிவடைந்த காலாண்டு மற்றும் ஒன்பது மாதங்கள் மற்றும் செப்டம்பர் 30, 2025 அன்று முடிவடைந்த காலாண்டிற்கான நிலுவைகள் மார்ச் 31, 2025 அன்று முடிவடைந்த ஆண்டிற்கான தணிக்கை செய்யப்பட்ட இருப்புநிலைக் குறிப்பின் படியும், டிசம்பர் 31, 2024 அன்று முடிவடைந்த காலாண்டு மற்றும் ஒன்பது மாதங்களுக்கான நிலுவைகள் செபி (பட்டியல் மற்றும் பிற வெளிப்படுத்தல் தேவைகள்) விதிமுறைகள், 2015–ன் படி மார்ச் 31, 2024 அன்று முடிவடைந்த ஆண்டிற்கான தணிக்கை செய்யப்பட்ட இருப்புநிலைக் குறிப்பின் படியும் உள்ளன.

குறிப்புகள்:
1. மேலே உள்ள தணிக்கை செய்யப்படாத தனியான நிதி முடிவுகள் தணிக்கைக் குழுவால் ஆய்வு செய்யப்பட்டு, 13.02.2026 அன்று நடைபெற்ற கூட்டத்தில் இயக்குனர்கள் குழுவால் ஒப்புதல் அளிக்கப்பட்டது.
2. முந்தைய காலம் / ஆண்டு புள்ளிவிவரங்கள் தேவைப்படும் இடங்களில் மீண்டும் தொகுக்கப்பட்டுள்ளன மற்றும் / அல்லது சீரமைக்கப்பட்டுள்ளன.
3. நிறுவனம் முக்கியமாக ஒரே ஒரு பிரிவில் மட்டுமே செயல்படுகிறது – ரீட் சுவிட்சுகள், ப்ராக்ஸிமிட்டி சுவிட்சுகள் & பால் சுவிட்சுகள் உற்பத்தி.
4. இந்திய GAAP–ன் படி அறிவிக்கப்பட்ட நிகர லாபம் அல்லது நஷ்டத்திற்கும், Ind AS–ன் படி மொத்த விரிவான வருமானத்திற்கும் இடையிலான இணக்கம் கீழே கொடுக்கப்பட்டுள்ளது:

ரூ. லட்சத்தில்

விவரங்கள்	31.12.2025–ல் முடிந்த காலாண்டு	31.12.2024–ல் முடிந்த காலாண்டு
முந்தைய GAAPன் கீழ் நிகர லாபம் (கூட்டுக/கழிக்க) : இந்த் ஏஎஸ் சரி செய்யப்பட்டது	-211.05	-174.68
இந்த் ஏஎஸ்-ன் கீழ் நிகர லாபம்	**-211.05**	**-174.68**
இதர விரிவான வருமானம்		
காலத்திற்கான மொத்த விரிவான வருமானம்	**-211.05**	**-174.68**

5. நிறுவனம் எந்த வணிக உறுதிமொழி பத்திரங்கள் (CPs), NCD–கள் & NCRP–களை வெளியிடவில்லை, எனவே வட்டி/ஈவுத்தொகை செலுத்துதலுடன் அசல் தொகையைத் திரும்பச் செலுத்துவதற்கான தேதிகள் எழாது.
6. டிசம்பர் 31, 2025–ல் முடிவடைந்த காலாண்டில் நிறுவனத்திற்கு ரூ. 211.05 லட்சம் நிகர நஷ்டம் ஏற்பட்டுள்ளது. அன்றைய நிலவரப்படி, நிறுவனத்தின் சேர்ந்துள்ள நஷ்டம் மொத்தம் ரூ. 2079.63 லட்சமாக உள்ளது, இது அதன் நிகர மதிப்பில் முழுமையான தாக்கத்தை ஏற்படுத்தி உள்ளது. மேலும், அன்றைய நிலவரப்படி, நிறுவனத்தின் நடப்பு பொறுப்புகள் அதன் நடப்பு சொத்துக்களை விட ரூ. 1208.29 லட்சம் அதிகமாக உள்ளன. நிறுவனத்தின் நிதிநிலை அறிக்கை 'தொடரும் நிறுவனம்' அடிப்படையில் தயாரிக்கப்பட்டுள்ளது.
7. **கட்டுப்பாட்டில் / நிர்வாகத்தில் மாற்றம்**
இந்தியப் பங்கு மற்றும் பரிவர்த்தனை வாரியம் (பட்டியல் கடமைகள் மற்றும் வெளிப்படுத்தல் தேவைகள்) விதிமுறைகள், 2015 –ன் ஒழுங்குமுறை 30–ன் படி (அட்டவணை III–ன் பகுதி A உடன் வாசிக்கவும்), நிறுவனத்தின் தற்போதைய புரோமோட்டரான – குந்தர் அமெரிக்கா இன்க் நிறுவனத்துக்கும், கையகப்படுத்துபவர்களான – பிபியு எண்டர்பிரைசஸ் பிரைவேட் லிமிடெட், டூரிஸ்டாஸ் ஹரிசான்ஸ் பிரைவேட் லிமிடெட் மற்றும் திரு. நிகில் பூஜாரி ஆகியோருக்கும் இடையே 24 ஜனவரி 2026 அன்று ஒரு பங்கு கொள்முதல் ஒப்பந்தம் கையெழுத்தானது. இதன்படி கையகப்படுத்துபவர்கள், குந்தர் அமெரிக்கா இன்க் வசம் உள்ள நிறுவனத்தின் செலுத்தப்பட்ட பங்கு மூலதனத்தில் 37.6327% (முப்பத்து ஏழு புள்ளி ஆறு மூன்று இரண்டு ஏழு சதவீதம்) அதாவது 9,22,000 (ஒன்பது லட்சத்து இருபத்திரண்டாயிரம்) சமபங்கு பங்குகளை ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட தவணைகளில், ரூ. 2,76,60,000/– (இந்திய ரூபாய் இரண்டு கோடியே எழுபத்தாறு லட்சத்து அறுபதாயிரம் மட்டும்) என்ற மறுபயன் மற்றும் அதனுடன் தொடர்புடைய உரிமைகள் மற்றும் கடமைகளுக்காக வாங்க முன்மொழிந்துள்ளனர்.
8. **நிறுவனத்தின் நோக்கம் பிரிவில் மாற்றம்**
நிறுவனத்தின் இயக்குநர்கள் குழு 19 ஜனவரி 2026 தேதியிட்ட கூட்டத்தில், தானியங்கள், மசாலாப் பொருட்கள், மசாலா, பானங்கள், பால் பொருட்கள், பால் சார்ந்த பொருட்கள், வசதியான உணவுகள் மற்றும் அனைத்து வகையான பதப்படுத்தப்பட்ட உணவுகள் மற்றும் ஒவ்வொரு விளக்கமும் கொண்ட அனைத்து வகையான உணவு மற்றும் உணவு தொடர்பான பொருட்களையும் உற்பத்தி செய்தல், பதப்படுத்துதல், தயார் செய்தல், பாதுகாத்தல், சுத்திகரித்தல், வாங்குதல், விற்றல் மற்றும் வேறு ஏதேனும் வகையில் கையாளுதல் ஆகியவற்றுக்காக பல உணவு பதப்படுத்தும் அலகுகளைக் கட்டுதல், அமைத்தல், நிறுவுதல், ஊக்குவித்தல், மேற்கொள்ளுதல், கையகப்படுத்துதல், சொந்தமாக்குதல், இயக்குதல், போக்குவரத்து செய்தல், பொருத்துதல், நிர்வகித்தல், புதுப்பித்தல், புனரமைத்தல், மேம்படுத்துதல், அமைத்தல், கணக்கில் கொண்டு வருதல், பராமரித்தல், வைத்திருத்தல், இயக்குதல் மற்றும் நடத்துதல் ஆகிய நோக்கங்களைச் சேர்க்க நிறுவனத்தின் நோக்கம் பிரிவில் மாற்றத்திற்கு ஒப்புதல் அளித்துள்ளது. மேலும் இது தொடர்பாக துணை மற்றும் சார்பு சேவைகளை வழங்குதல் மற்றும் வாங்குபவர், விற்பவர், இருப்பு வைப்பவர், விநியோகஸ்தர்கள், இறக்குமதியாளர், ஏற்றுமதியாளர் அல்லது அனைத்து வகையான உணவு தானியங்கள், பொருட்கள், காய்கறிகள், பழங்கள், உண்ணக்கூடிய பொருட்கள், சைவ மற்றும் அசைவ உணவுப் பொருட்கள் மற்றும் இதே போன்ற பொருட்களில் நிறுவனத்தின் முக்கிய நோக்கமாகச் செயல்படுதல் ஆகியவற்றையும் உள்ளடக்கி உள்ளது.
9. மேலே உள்ள நிதி முடிவுகள் நிறுவனத்தின் இணையதளத்தில் கிடைக்கின்றன.

சுவிட்ச்சிங் டெக்னாலஜிஸ் குந்தர் லிமிடெட்டிற்காக

ஒப்பம்/–	ஒப்பம்/–
C. சந்திரசூடன்	K. மணி
நிர்வாக இயக்குனர்	செயல் அல்லாத இயக்குனர்

இடம் : சென்னை 45
தேதி : 13.02.2026